O.S.50-2017

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.50/2017

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ரெங்கையா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரெங்கையா | வயது | : | 88/2024 |
| தகப்பனார் பெயர் | : | மாரியப்பன் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | பெருங்களூர் | தொழில் | : | விவசாயம் |

நாள்-15.02.2024

பி.வா.சா.1

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது தகப்பனார் பெயர் மாரியப்பன். என் தகப்பனாருக்கு நான், பெரமன், சின்னாத்தாள், கருப்பையா, கோவிந்தம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள். நான் தான் அவர்களில் மூத்தவர்.

2. வழக்கு பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும். வழக்கிற்கான விபரங்களை வழக்கறிஞரிடம் நான்தான் சொன்னேன்.

3. எனது தகப்பனார் 1986ல் இறந்தார். எனது தாயார் காத்தாயி 1987ம் வருடம் இறந்துவிட்டார்.

4. எனது தந்தை, தாயார் இறப்பிற்கு பிறகு அவர்களின் வாரிசுகளாகிய நான், பெரமன், சின்னாத்தாள், கருப்பையா, கோவிந்தம்மாள் ஆகியோர்களுக்கு இந்த சொத்துக்கள் கிடைத்து நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான்.

5. பெரமன், கருப்பையா ஆகியோர்கள் இறந்துவிட்டனர். பெரமனின் வாரிசுகள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

6. இந்த வழக்கின் வாதிகள் இறந்துபோன கருப்பையாவின் வாரிசுகள்.

7. 9 முதல் 13 பிரதிவாதிகள் எங்களிடமிருந்து சொத்துக்களை கிரையம் வாங்கிய நபர்கள்.

8. மாரியப்பனின் வாரிசுகள் ஒவ்வொருவருக்கும் 1/5 பாகம் உரிமை உண்டு என்றால் சரிதான். அதனால் வாதிகளுக்கும் சொத்தில் 1/5 பாகம் உரிமை உண்டு என்றால் சரிதான். அதே போல் எனக்கும் 1/5 பாக உரிமை உண்டு.

9. குடும்ப சொத்துக்கள் அனைத்தும் கூட்டு பாத்தியத்திலும், அனுபவத்திலும் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

10. எனது தகப்பனார் படிக்காதவர். விவசாய வேலை செய்துவந்தார்.

மு.மா.நீ,

11. பூர்வீக சொத்துக்கள் எங்களுக்கு இருந்தது. கிரையம் வாங்கிய சொத்துக்களும் இருந்தது.

12. பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை கொண்டுதான் தனிப்பட்ட முறையில் சொத்து வாங்கினார் என்றால் சரிதான்.

13. வாதிகள் என்னிடம் பங்கு கேட்டு, நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

14. வாதிகளுக்கு பாகம் கொடுக்காமல் சொத்துக்கள் எனக்கு தனிப்பட்டது போல் காட்டி கிரையம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

15. வழக்கில் 34 அயிட்டங்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

16. சின்னாத்தாள், கோவிந்தம்மாள் ஆகியோர்களுக்கும் 1/5 பாகம் உண்டு. ஆனால் அவர்களுக்கு திருமணத்தின்போதே கொடுத்து ஒதுக்கிவிட்டார்கள்.

17. நான் சொல்வதுபோல் திருமணத்தின்போது அவர்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்து ஒதுக்கவில்லை என்றால் சரியல்ல. அவர்களுக்கு எந்தெந்த சொத்துக்களை விற்று திருமணம் செய்யப்பட்டது என்றால் அது என் தகப்பனாரிடம்தான் கேட்க வேண்டும். இது சம்மந்தமான சொத்துக்கள் விபரத்தை எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

18. அவ்வாறு அவர்களுக்கு பாகம் கொடுக்கவில்லை என்றாலும், வாதிகள் பாகம் கேட்கவில்லை என்று சொல்வது உண்மையல்ல என்றாலும் சரியல்ல.

19. பாகம் பிரித்ததை காட்டுவதற்கு பாக நோட்டு ஒன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பாக நோட்டு வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.அதில் ஒவ்வொருத்தருக்கும் தனித்தனி நோட்டு போட்டு சொத்து ஒதுக்கப்பட்டதாக எதிர்வழக்குரையில் சொல்லியிருப்பது உண்மையல்ல என்றால் சரியல்ல.

20. அதுபோல் எந்தவொரு ஆவணமும் ஏற்படவில்லை என்றாலும், அதுபோன்ற ஆவணங்களை வேறு யாரும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

21. நான் சொல்வதுபோல் உண்மையிலேயே பாகப்பிரிவினை நடைபெற்றிருந்தால் பட்டா மாற்றியிருப்பேன் என்றால் சரியல்ல. பட்டா இதுவரை மாற்றவில்லை.

22. உண்மையிலேயே பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால் யாருடைய அனுபவத்தில் உள்ளதோ அவர்கள் பெயருக்கு பட்டா மாற்றியிருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல.

23. வழக்கு சொத்துக்களுக்குரிய பட்டா எனது தகப்பனார் பெயரில் உள்ளது.

24. எனது தகப்பனார் இறப்பதற்கு முன் 5,6 வருடங்களாக நோய்வாய்பட்டிருந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் மனது சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் சரிதான்.

25. என் தகப்பனார் எனக்கு மனமுவந்து எந்த ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

26. அந்த பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண், நான்கெல்லை தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் எழுதி கொடுக்கவில்லை என்றாலும், நாங்களாக ஏற்படுத்திக்கொண்டதால்தான் அவ்வாறு தவறுதலாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

27. நான் தாக்கல் செய்துள்ள பாக நோட்டில் கண்டவாறு பாகம் பிரிக்கவில்லை என்றாலும், அவ்வாறு யாரும் அனுபவிக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

28. கருப்பையா, பெரமன் ஆகியோர் இரவு பள்ளிக்கு சென்றார்கள். அவர்களுக்கு கையெழுத்து போட மட்டும்தான் தெரியும். எழுத, படிக்க தெரியாது.

29. வசதிக்கு ஏற்பட மனைகளில் அவரவர்கள் வீடு கட்டி அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த இடங்களையும் பாகம் பிரிக்கவில்லை என்றாலும், வசதிக்கேற்ப வீடு கட்டியுள்ளோம் என்றாலும் சரியல்ல. அதனால்தான் நத்தத்தில் யார் அனுபவத்தில் உள்ளதோ அவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும், பாகம் பிரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

30. கருப்பையா, பெரமன் ஆகியோர்களுக்கு நான் சொல்வதுபோல் பாகம் பிரிக்கவில்லை என்றாலும், அவர்கள் அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

31. கருப்பையா, பெரமன் ஆகியோர் பெயரில் பட்டா ஏற்படவில்லை.

32. நான் தாக்கல் செய்துள்ள பாக நோட்டு சாட்சிய சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

33. பெரமன் தினக்கூலி அடிப்படையில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். பெரமன் மனைவி சியாமளாதேவி அரசு வேலை எதுவும் பார்க்கவில்லை.

34. 18,20,21 ஆகிய அயிட்ட சொத்துக்கள் பெரமனின் வருமானத்தை கொண்டு அவர் மனைவி பெயரில் வாங்கப்பட்ட சொத்து அல்ல என்றாலும், குடும்ப சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

35. பாக நோட்டுப்படி குடும்ப சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக அந்த ஆவணத்தை உற்பத்தி செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

36. பெரமன் புதுக்கோட்டையில் எந்த வீடுகளையும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

37. நானும், பெரமன் மனைவியும் 3ம் நபர்களுக்கு கிரையம் கொடுத்தது வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.

38. எனது தாயாருக்கு பாகம் ஒதுக்கியதாகவும், அந்த சொத்துக்களை எனது தாயாருக்கு பின்னர் கருப்பையவின் வாரிசுகள் அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்லியிருப்பது தவறு என்றாலும் சரியல்ல.

39. 1ம் வாதி சின்னாத்தாளின் மகள் என்றால் சரிதான். அவருக்கு சின்னாத்தாள் மூலமாகவும் பாக பாத்தியம் உள்ளது என்றால் சரிதான்.

40. எனது தகப்பனார் மாரியப்பனுக்கு சில சொத்துக்கள் ஒதுக்கி அவர் எனக்கு இனாம் செட்டில்மெண்ட் மூலமாக எழுதி கொடுத்துள்ளார் என்று சொல்வது உண்மையல்ல என்றாலும், அந்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று சொன்னாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.